DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 172/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : துரைராஜ் (சார்பு ஆய்வாளர்) (P.w.16 )
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 8th day of June 2026

( எதிரி ஆஜர் )

நான் தற்போது சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் நகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி தற்காலிக பணிநீக்கத்தில் உள்ளேன். கடந்த 30.12.2015ம் தேதியன்று 14.00 மணியளவில் திருச்சுழி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது அருப்புக்கோட்டை சண்முகவேல் நகரைச் சேர்ந்த தங்கதுரை என்பவர் விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கடந்த 15.10.2015ம் தேதி கொடுத்த புகார் மனுவிற்கு விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக C.No.48277/Griveance/SP/VNR/2015, G3/2537 dt 15.10.2015 ன்படி நடவடிக்கை எடுக்க திருச்சுழி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து கடந்த 16.10.2015ம் தேதி திருச்சுழி வட்ட காவல் ஆய்வாளருக்கு அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் நிலைய குற்ற எண். 329/2015 இதச பிரிவுகள்

420, 379, 506(1) மற்றும் 21(1) MMDR Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவையும் இணைத்து அருப்புக்கோட்டை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். வழக்கு கோப்புகளை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

1. புகார் மனுவில் புகார்தாரர் கொடுத்த மனுவானது 16.10.2015ம் தேதி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பெறப்பட்டதாகவும், உட்கோட்ட துணைகாவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 17.10.2015ம் தேதி பெறப்பட்டதாகவும் முத்திரை உள்ளது என்றால் சரிதான். எங்களது நிலைய எழுத்தரிடம் இருந்து மேற்படி புகாரினை பெற்று 30.12.2015ம் தேதி அதாவது சுமார் 74 நாட்கள் கழித்து நான் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். 04.01.2016ம் தேதி முதல் தகவல் அறிக்கையின் அசல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதாக நீதிமன்ற முத்திரை உள்ளது என்றால் சரிதான். புகார்தாரரை நான் நேரடியாக சந்தித்து விசாரணை செய்தேனா என்றால் இல்லை.

2. புகார்தாரர் தனது புகார் மனுவில் ஒப்பந்த காலம் 3 மாதம் என்றும் ஆனால் 1 மாதத்திற்குள்ளேயே முடித்துவிடுவார்கள் என்று சொன்னதாக ஏதாவது குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. எதிரி குமார் 1மாதம் கழித்து தனது முதலாளி ரெட்டி கர்நாடாக சென்றுவிட்டதாகவும் அவர் வந்தவுடன் முடித்துவிடுவதாக புகார்தாரிடம் சொன்னதாக குறிப்புகள் உள்ளதா என்றால் இல்லை. கிரைய ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட சொத்தானது சிவில்

வழக்கு நிலுவையில் உள்ளதாக புகார்மனுவில் சொல்லி உள்ளாரா என்றால் சொல்லி உள்ளார். உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளபோதுதான் சர்வே எண். 400/1, 2, 3 ஏ ஆகிய சொத்துக்களை பொறுத்து கிரைய ஒப்பந்தம் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. புகார் மனுவில் எதிரி குமார் புகார்தாரரை தொலைபேசியில் மிரட்டல் விடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் தொலைபேசியிலும் மிரட்டல் விடுத்ததாக எழுதியுள்ளார். புகார் மனுவில் நேரடியாக மிரட்டியதாக குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. எந்த தேதியில், எந்த நேரத்தில் தொலைபேசி மூலமாக மிரட்டல் விடுத்தார் என்ற குறிப்பும் புகார் மனுவில் இல்லை என்றால் சரிதான். புகார் மனுவில் கடைசி பக்கத்தில் தேதி 15 என்றும், காலை என்று திருத்தப்பட்டுள்ள நிலையில் அதன் அருகே எந்த கையொப்பமும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் எதிரி மணலை எடுத்ததாக நேரடியாக பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். கேள்விபட்டதாகதான் சொல்லி உள்ளார் என்றால் சரிதான். புகார் மனுவில் மணல் எவ்வளவு அளவு ஆழத்திற்கு தோண்டப்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன நாள், நேரத்தில் புகார் மனு எங்கள் அலுவலகத்தில் பெறப்பட்டு நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.